JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **595/2025** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | ஜீவா | Village | நேதாஜி 2 ம் வீதி, திருப்பூர் |
| Father’s Name | துரைசாமி | Taluk | |
| | | Age | |

**A**2, **A**3 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 27.05.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விளம்பரப் பலகை செய்யும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரும் என்னுடைய உறவினர்கள் ஆவார்கள். இவ்வழக்கில் 1 ம் எதிரி துரைசாமி இறந்து போய் விட்டார். ஆஜரில் உள்ள சம்பூர்ணம் துரைசாமியின் மனைவி ஆவார். பாலசுப்பிரமணியம் 1 ம் எதிரியின் அக்கா மகன் ஆவார். இவ்வழக்கில் சாட்சிப் பட்டியலில் 4 வது சாட்சியாக குறிப்பிட்டுள்ள மீனா என்னுடைய உறவினர் ஆவார். 2 ம் எதிரி பாலசுப்பிரமணியத்தை மீனா திருமணம் செய்துள்ளார். மீனாவும், 2 ம் எதிரியும் கணவன் மனைவி ஆவார்கள் இருவரும் தற்போது ஒன்றாக தான் வசித்து வருகிறார்கள். ஆஜர் எதிரிகளுடன், நாங்கள் சமாதானமாக சென்று விட்டதால் சமாதான மனுவில் அ.சா.1 கையெழுத்து செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். சம்பவத்தை பற்றி தற்போது எனக்கு நினைவில் இல்லை. சென்னிமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. 3 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1. 29.03.2022 ம் தேதி மாலை 6.30 மணிக்கு ரெட் டாக்ஸி வாடகை காரில் அ.சா.1 ன் மாமனார் ராஜா ,மாமியார் ராஜேஸ்வரி, மீனா. அ.சா.1 ன் மனைவியின் பெரியம்மாள் மகன் நானும் , ரங்கராஜும், அ.சா.1 ம் வேறு வண்டியிலும் மேற்கு புதுப்பாளையம் பாலசுப்பிரமணி வீட்டுக்கு வந்தோம் என்றால் சரியல்ல. அங்கிருந்த பாலசுப்பிரமணியத்தின் தாய்மாமன் மனைவி சம்பவத்திற்கு மீனாவுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பூர்ணம் தகாத வார்த்தையால் திட்டினார் என்றால் சரியல்ல அப்போது துரைசாமி என்பவர் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து வந்து அ.சா.1 ன் தலையில் பின் பக்கம் வெட்டினார் என்றால் சரியல்ல அ.சா.1 தடுமாறிய போது அதே அரிவாளால் அ.சா.1 ன் வலது கெண்டை கையில் பட்டு ரத்த காயம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல அ.சா.1 யை காப்பாற்ற வந்த என்னையும் துரைசாமி அதே அரிவாளால் வெட்டியதில் எனக்கும் கை விரல்களில் ரத்தக்காயமானது என்றால் சரியல்ல.

2. அப்போது பாலசுப்பிரமணி மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து அ.சா.2 ன் வலது கையை வெட்டினார் என்றால் சரியல்ல அதில் அ.சா.2 க்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல நானும் ரங்கராஜும் அ.சா.1ம் 108 ஆம்புலன்ஸ் மூலம் சானிடோரியம் மெடிக்கல் கல்லூரியில் சிகிச்சையில் சேர்ந்தோமா என்றால் எனக்கு அது பற்றி தற்போது நினைவில் இல்லை. திருப்பூர் ARS மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. சென்னிமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த போது நடந்த விவரங்கள் அனைத்தையும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை